<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 36/2024**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய அழகுசுந்தரம் **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 17.03.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : அழகுசுந்தரம் | | |
| Father /Husband Name | : பக்கிரிசாமி | Court | : |
| Village | : திருவாரூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 48/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>**முதல் விசாரணை:**</u>

நான் இவ்வழக்கில் வாதி இளங்கோவன் என்பவரின் பவர் ஏஜென்டுகளில் ஒருவராவேன் மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

வாதி பெயரில் உள்ள பட்டாவின் கணினி நகல் **வா.சா.ஆ.** 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்காக வில்லங்க சான்றிதழின் கணினி நகல் **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.10.1996 தேதியில் 2 ம் பிரதிவாதிக்கு 1 ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.09.2023 அன்று வாதி பிரதிவாதிகளுக்கும் மற்ற நபர்களுக்கும் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பை 2 ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்காக அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ. 5** ஆக குறியீடு

செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.